


# ஐரோப்பிய மறுமலர்ச்சி

(தரம் 10)











Mrs. இன்ஷிபா இக்பால் (BA), SLTS 3 - 1 (A)

கே / தெஹி / நிவ் பொலட்டகம தமிழ் வித்தியாலயம்.

தேர்ச்சி மட்டம் 9.1
ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கான வரலாற்றுப் பின்னணியை நுணுகி நோக்குவார்

## பாட உள்ளடக்கம்

- மறுமலர்ச்சிக்கான அறிமுகம்
- மறுமலர்ச்சிக்கான காரணங்கள்
- மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள்



## அறிமுகம்

மறுமலர்ச்சி என்பதன் நேரடிக் கருத்து - **மீண்டும் மலர்தல்**

**ஐரோப்பாவின் வரலாற்றுக் காலத்தினை 3 காலகட்டங்களாக வகுக்கலாம்**

**1. பழைய காலம்**
- (கி.பி 5ம் நூற்றாண்டுக்கு முன்னைய காலம்)

**2. மத்திய காலம்**
- (கி.பி 5 - கி.பி 15ம் நூற்றாண்டு வரை)

**3. நவீன காலம்**
- (கி.பி 15ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதி)

## மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்பதன் நேரடிக் கருத்து - **மீண்டும் மலர்தல்**

கி.பி 15, 16ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் சமயம், கலை, இலக்கியம், விஞ்ஞானம் போன்ற சகல துறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களே மறுமலர்ச்சி ஆகும்.



**அதாவது பழைய காலத்தில் காணப்பட்ட கிரேக்க, உரோமப் பண்பாடுகள் மீண்டும் ஐரோப்பாவில் தோன்றியமையே "மறுமலர்ச்சி" எனப்படுகிறது.**

# மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

## 1. கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாதல்

1453ல் ஒட்டோமன் துருக்கியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே இடம்பெற்ற யுத்தங்களின் இறுதியில் கொன்ஸ்தாந்திநோபில் நகர் துருக்கியர் வசமானது. இதனால் கொன்ஸ்தாந்தி நோபில் நகரில் உள்ள மக்கள் அங்கு காணப்பட்ட நூலகங்களில் இருந்த பெறுமதியான கிரேக்க , உரோம கால நூல்களை எடுத்துக் கொண்டு மத்திய ஐரோப்பாவிற்குச் சென்றனர்.








(படத்தில் சிவப்பு நிறத்தால் குறிக்கப்பட்டுள்ள இடமே கொன்ஸ்தாந்திநோபில் ஆகும்)

## 2. வர்த்தக முன்னேற்றமும் புதிய செல்வந்த வகுப்பினரின் தோற்றமும்

- மேற்கு கிழக்கு நாடுகளுக்கிடையே இடம்பெற்ற வர்த்தகத்தின் காரணமாக ஐரோப்பாவில் புதிய வர்த்தக வகுப்பினர் தோற்றம் பெற்றதுடன் வர்த்தக நகர்களும் தோற்றம் பெற்றன (வெனிஸ், ஜெனோவா)



- செல்வந்தக் குடும்பங்கள் தோற்றம் பெற்றமை
  - புளொரன்ஸ் நகர் - மெடிசி குடும்பம்
  - மிலான் - ஸ்பெலோ குடும்பம்
  - பூரா நகர் - எஸ்டே குடும்பம்
  - மாண்டுவா நகர் - கொன்ஸாக குடும்பம்
- செல்வந்தக் குடும்பங்கள் கலைகளுக்கு அனுசரனை வழங்கியமை





## 3. அறிவு வளர்ச்சி

- மத்தியகாலத்தில் அனைத்துத் துறைகளிலும் சமயத்தின் ஆதிக்கமே காணப்பட்டது.
- சமயத்தை மையமாகக் கொண்ட கல்வி முறையே காணப்பட்டது. சமயம், இறையியல், மெய்யியல், சட்டம் போன்ற பாடங்களே கற்பிக்கப்பட்டன.
- 12ம் நூற்றாண்டின் பின்னர் பல்கலைக் கழகங்கள் தோன்றின
  - பொலஞ்ஞா
  - பீசா
  - பாதுவா
- பல்கலைக் கழகங்களில் இலக்கியம், இலக்கணம் , நாடகம், வரலாறு போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.
- இதனால் மத்திய காலத்தின் இறுதிப்பகுதியில் கல்விமான்களின் தோற்றம் பெற்றனர்
- கூட்டன்பேர்க் என்பவரால் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையினால் கிரேக்க, உரோம கால நூல்களை அச்சிட்டு ஐரோப்பாவெங்கும் விநியோகக் கூடியதாக இருந்தது.





# மறுமலர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்கள்




## 1. சமய சீர்திருத்தம்

- மத்திய கால ஐரோப்பாவில் சமயத்தின் ஆதிக்கமே காணப்பட்டது
- கத்தோலிக்க திருச்சபையிடம் அதிக அதிகாரம் காணப்பட்டது
- கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த சில குருமார்கள் ஆன்மீக விடயங்களை விடவும் லௌகீக விடயங்களில் அதிக ஆர்வம் காட்டி சுகபோக வாழ்கை வாழ்ந்தனர்.
- திருச்சபையில் ஊழல்களும் நடைபெற்றன
- மறுமலர்ச்சிக்காலத்தில் திருச்சபையில் காணப்பட்ட குறைபாடுகளை சிலர் பகிரங்கமாக கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார்கள். இவர்களே சமய சீர்திருத்தவாதிகள் எனப்பட்டனர்
- கத்தோலிக்க திருச்சபையை விமர்சித்ததால் இவர்களை கத்தோலிக்க திருச்சபை விலக்கி வைத்தது.
- இந்த சமய சீர்திருத்தவாதிகளால் உருவாக்கப்பட்ட புதிய சமயப் பிரிவே புரட்டஸ்தாந்து சமயம் எனப்படுகிறது
- அவ்வாறு ஐரோப்பாவில் தோன்றிய சமய சீர்திருத்தவாதிகளும் அவர்களின் நாடுகளும் வருமாறு

| | |
|---|---|
| ஜேர்மனி | மார்டின் லூதர் |
| இங்கிலாந்து | ஜோன் வைக்கிளிப் |
| பிரான்ஸ் | இராஸ்மஸ் |
| பொஹீமியா | ஜோன் ஹஸ் |

## 2. மானிடவாதம்



- ❑ அனைத்தையும் விட மனிதன் மேன்மையானவன் எனும் கோட்பாடே மானிடவாதம் ஆகும்
- ❑ மத்தியகாலத்தில் அனைத்துத் துறைகளிலும் சமயத்தின் ஆதிக்கமே காணப்பட்டது. இக்காலத்தில் அனைத்தையும் விட சமயமே மேலாதனாகக் கருதப்பட்டது
- ❑ மறுமலர்ச்சியின் பின்னர் மனிதன் தர்க்க ரீதியாகச் சிந்திக்கத் தொடங்கியமையால் சமயத்தின் ஆதிக்கம் மறைந்து மானிடவாதக் கோட்பாடு எழுச்சி பெற்றது.


## 3. கலை மற்றும் கல்வி வளர்ச்சி

- ❑ ஐரோப்பாவில் மொழி, இலக்கியம், சிற்பம், சித்திரம், கட்டக்கலை ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றமே கல்வி மறுமலர்ச்சி ஆகும்.

### (i) <u>மொழி மற்றும் இலக்கியம்</u>

- ❖ மத்திய காலத்தில் கிரேக்க, இலத்தீன் மொழிகள் வழக்கற்றுப் , பிரதேச கிளைமொழிகளின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது.
- ❖ மறுமலர்ச்சிக் காலத்தில் கிரேக்க உரோம நூல்களைக் கற்க மக்கள் மீண்டும் கிரேக்க, இலத்தீன் மொழிகளைக் கற்றுக் கொண்டனர்
- ❖ மொழி வளர்ச்சி காரணமாக ஐரோப்பாவெங்கும் பல எழுத்தாளர்கள் தோன்றினார்கள்


### இத்தாலியில் தோன்றிய எழுத்தாளர்கள்




தாந்தே
(டிவினா கொமடியா)



பெற்றாக் (லோராட்டாவுக்கு எழுதிய கவிதைகள்)




பொக்காஷியோ (டிக்மாறன்)

### இங்கிலாந்தில் தோன்றிய எழுத்தாளர்கள்



தோமஸ் மூர்



பிரான்சிஸ் பேக்கன்



வில்லியம் ஷேக்ஸ்பியர்

### பிரான்சில் தோன்றிய எழுத்தாளர்



இராஸ்மஸ்

### (ii) சித்திரக் கலை



- மத்திய காலத்தில் கலைகளுக்கு கத்தோலிக்க திருச் சபையே அனுசரனை வழங்கி வந்தது. ஆதனால் சித்திரக் கலையிலும் சமயத்தின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது.
- மத்திய காலத்தில் சமய சார்பான விடயங்கள் மாத்திரமே சித்திரமாக வரையப்பட்டிருந்தன (யேசுநாதர், கன்னி மரியாள் போன்றோரின் படங்கள்)
- மறுமலர்ச்சிக் காலத்தில் புதிதாக செல்வந்த வகுப்பினர்கள் தோற்றம் பெற்றதால் அவர்கள் கலைகளுக்கு அனுசரணை வழங்கத் தொடங்கினார்கள்
- மறுமலர்ச்சிக் காலத்தில் உலகியல் இரசனைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

## மறுமலர்ச்சிக் கால சித்திரக் கலைஞர்கள்

**லியானோடோ டாவின்ஸி**



- இத்தாலி நாட்டவர்
- சித்திரக் கலைஞராக மாத்திரமன்றி கவிஞராக, பாடகராக, விஞ்ஞானியாக, பொறியியலாளராக விளங்கினார்
- மோனாலிசா, இயேசுவின் இறுதி இராப் போசனம் என்பன இவரால் வரையப்பட்ட உலகப் புகழ்பெற்ற சித்திரங்களாகும்.


மோனாலீசா ஓவியம்



இயேசுவின் இறுதி இராப்போசனம்



**மைக்கல் ஆஞ்சலோ**



- இத்தாலி நாட்டவர்
- சித்திரக் கலைஞராக மாத்திரமன்றி சிற்பக் கலையிலும் கட்டடக் கலையிலும் சிறந்து விளங்கினார்
- சிஸ்டைன் ஆலயத்தின் பாவுகையில் இவரால் பல ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன
- இறுதித் தீர்ப்பு மற்றும் ஆதாமின் சித்திரங்கள் இவரின் உலகப் புகழ்பெற்ற சித்திரங்களாகும்


இறுதித் தீர்ப்பு ஓவியம்



சிஸ்டைன் ஆலயத்தின் பாவுகையில் வரையப்பட்ட ஓவியம்



ஆதாமின் சித்திரம்



### (iii) சிற்பக் கலை




லோரன்ஸா மெடிசி உருவச் சிலை

- ❖ பளிங்குக் கற்களால் சிற்பங்களை அமைக்கும் முறை பிரசித்தி பெற்றுக் காணப்பட்டது.
- ❖ மெடிசி குடும்பத்தைச் சேர்ந்த லோரன்ஸா மெடிசியின் உருவம் மைக்கல் ஆஞ்ஞெலொவால் வடிவமைக்கப்பட்டிருந்தது.
- ❖ தாவீது சிலை, மோசசின் சிலை,பியெட்டா சிலை என்பன மைக்கல் ஆஞ்சலோவின் மகத்துவமிக்க படைப்புக்களாகும்



தாவீது உருவச் சிலை



பியெட்டா உருவச் சிலை




மோசஸ் உருவச் சிலை

### (iv) கட்டடக் கலை

- ❖ மத்திய காலத்தில் நுனிக் கோபுரங்கள், வில் வளையக் கூரை, பிரமிட் வடிவத் தூண்கள் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களாகக் காணப்பட்டன.
- ❖ மறுமலர்ச்சிக் காலத்தில் உரோமக் கட்டடக் கலைக்கு அமைய வட்ட வடிவிலான வில் வலயம், உயர்ந்த தூண், அரைவட்ட சிகரம் என்பன கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெற்றன.
- ❖ மறுமலர்ச்சிக்காலத்தில் பல சொகுசு மாளிகைகளும் அமைக்கப்பட்டன
- ❖ புனித பேதுருவின் பெசிலிக்கா (ஆலயம்) மறுமலர்ச்சிக் கால கட்டடக் கலைக்கு சிறந்த உதாரணம் ஆகும்

**மத்திய கால கட்டடக்கலை**






**மறுமலர்ச்சிக் கால கட்டடக்கலை**




புனித பேதுருவின் பெசிலிக்கா (ஆலயம்)




சொகுசு மாளிகை

**<u>மறுமலர்ச்சிக் கால கட்டடக்கலைஞர்கள்</u>**




பிரமத்தே



லியோனோடோ டாவின்சி



ரபாயல்




மைக்கல் ஆஞ்சலோ

## 4. விஞ்ஞான வளர்ச்சி



- ❑ கிரேக்க, உரோம நூல்களைக் கற்ற அறிஞர்கள் அனைத்தையும் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யத் தொடங்கினார்கள்
- ❑ புவி, சூரியன், சந்திரன், நட்சத்திரம் அனைத்தையும் அவர்கள் ஆராய்ந்ததால் புவி தொடர்பான பல புதிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.
- ❑ அவ்வாறே விஞ்ஞானத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது.
- ❑ மறுமலர்ச்சிக்கால கண்டுபிடிப்பாளர்களும் கண்டுபிடிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன



### (i) நிக்கலஸ் கொப்பனிகஸ்

- ❖ இவர் நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை
- ❖ போலந்து நாட்டவரான இவர் புவி தொடர்பாக புதிய கருத்தினை முன்வைத்தார்.
- ❖ "புவி கோள வடிவானது, ஏனைய கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன" எனக் கூறினார்

### (ii) ஜொஹன்னஸ் கெப்லர்



- ❖ இவர் ஜேர்மனி நாட்டவர்
- ❖ நிக்கலஸ் கொப்பனிகஸ் கூறிய கருத்துக்களை உறுதி செய்தார்
- ❖ "ஞாயிற்றுத் தொகுதிக் கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன" எனக் கூறினார்





### (iii) கலிலியோ கலிலி


- ❖ இவர் செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை எனப்படுகிறார்.
- ❖ இவர் இத்தாலி நாட்டவர்
- ❖ தொலைநோக்கியைக் கண்டுபிடித்தர்
- ❖ வியாளனைச் சூழ உபகோள்கள் உள்ளன எனக் கூறினார்



(iv) **ஐசாக் நியுட்டன்**
- ❖ இவர் இங்கிலாந்து நாட்டவர்
- ❖ புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்

(v) **வில்லியம் ஹாவே**
- ❖ இவர் இங்கிலாந்து நாட்டவர்
- ❖ மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான
- ❖ தகவல்களை முன்வைத்தார்




(vi) **பெரசல்ஸ்**
- ❖ இவர் சுசிஸ் இனத்தவர்
- ❖ நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதற்கான சிகிச்சைகளையும் பரிசோதனை மூலம் கண்டறிந்தார்.

(vii) **மைக்கல் சர்வேட்ஸ்**
- ❖ இவர் சுசிஸ் இனத்தவர்
- ❖ மனித உடலின் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு சுவாசப்பையில் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை அடைந்து உடல் முழுவதும் பரவிச் செல்கிறது என்பதனைக் கண்டறிந்தார்.







(viii) **ஜொஹேன்ஸ் கூடன் பேர்க்**
- ❖ இவர் ஜேர்மனி நாட்டவர்
- ❖ அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தார்

**மறுமலர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்களின் தொடர்ச்சி மற்றும் ஐரோப்பிய மறுமலர்ச்சி இலங்கையின் மீது செலுத்திய தாக்கங்கள் போன்றன அடுத்த PDF இல் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளது.**

**நன்றி**